**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.**

முன்னிலை: திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி
2026 ம் வருடம் ஜீலை மாதம் 16 ம் நாள் வியாழக்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண்.254/2026**

அய்யங்காளை – 42/26,
த/பெ.அய்யாத்துரை,
சிறுவனூர் கிராமம்,
திருச்சுழி தாலுகா,
விருதுநகர் மாவட்டம். :: மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக
சார்பு ஆய்வாளர்,
அ.முக்குளம் காவல் நிலையம்,
குற்ற எண்.131/2026
பிரிவுகள் 296(பி), 115(2), 118(1), 351(3) BNS
& 4 of TNPHW Act :: எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

*****

இம்மனு என் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.1 திரு.V.செந்தில்குமார்,B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சிங்கராமு, அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து இன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இருதரப்பு வாதமும் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி தரப்பில் பிணை வேண்டி பிரிவு 480 BNSS–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி மீது அ.முக்குளம் காவல் நிலைய குற்ற எண்.131/2026 பிரிவுகள் 296(பி), 115(2), 118(1), 351(3) BNS & 4 of TNPHW Act ன் கீழ் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

<u>வழக்கின் சுருக்கம்</u>:–

3. இவ்வழக்கின் புகார்தாரர் தனது சொந்த ஊரில் புதிதாக வீடு கட்டி வருவதாகவும், கடந்த 02.07.2026 ம் தேதி 15.30 மணியளவில் புகார்தாரர், புகார்தாரரின் அம்மா மற்றும் மனைவி ஆகியோர்களுடன் தனது வீட்டில் இருந்த போது புகார்தாரரின் சித்தப்பா மகனான எதிரி அய்யங்காளை தனது வீட்டிற்கு அரிவாளுடன் சென்று டேய் தேவிடியா மகனே வெளியே வாடா என அசிங்கமாக பேசியதாகவும், பின்னர் வீட்டைவிட்டு வெளியே வந்த புகார்தாரரை பார்த்து பொதுப்பாதையில் எதுக்குடா வீட்டை கட்டி இருக்கீங்க என சொல்லி அரிவளால் புகார்தாரரின் பின் தலை, வலது கையில் தாக்கி ரத்தகாயத்தை ஏற்படுத்தியும், தடுக்க வந்த புகார்தாரரின் தாயாரை மேற்படி அரிவாளால் உச்சந்தலையில் தாக்கி வீக்க காயத்தை ஏற்படுத்தியும், தடுக்க வந்த புகார்தாரரின் மனைவியை எதிரி தேவிடியா என சொல்லி கீழே தள்ளிவிட்டதன் பேரில் அ.முக்குளம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எதிரி மீது பிரிவுகள் 296(பி), 115(2), 118(1), 351(3) BNS & 4 of TNPHW Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>மனுவின் சுருக்கம்</u>:–

4. மேற்படி மனுவில் எதிரி கடந்த 08.07.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். புகார்தாரரோ, அவரது குடும்பத்தினர்களோ மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வரவில்லை. மேற்படி மனுதாரர்/எதிரி வேறு எந்தவிதமான குற்ற வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை. மேலும் மேற்படி எதிரியின் வருமானத்தை நம்பியே

அவரது குடும்பத்தினர்கள் அன்றாட கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள். மேற்படி எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் அவர் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக மாட்டார். மேலும் தகுந்த ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்த தயாராக உள்ளார். எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுமாறும் கோரியிருந்தார்.

<u>எதிர்மனுதாரர் மறுப்புரையின் சுருக்கம்</u>:–

5. எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில், இவ்வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேற்படி மனுதாரர்/எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் சாட்சிகளை மிரட்டக்கூடும் என்பதாலும், இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், மேலும் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், மனுதாரர்/எதிரியை பிணையில் விட கடுமையாக ஆட்சேபனை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>தீர்வுமுடிவு</u>:–

6. இருதரப்பு வாதங்களும், வழக்கு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி கடந்த 08.07.2026 ம் தேதி முதல் இன்று 16.07.2026 ம் தேதி வரை **9** நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதே சம்பவம் தொடர்பாக தன்னை கருப்பையா மற்றும் இரண்டு நபர்கள் தாக்கியதாக எதிரி அ.முக்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண்.132/2026 பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சம்பவத்தின் போது எதிரிக்கு காயம் ஏற்பட்டதாக மருத்துவ ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. மேற்படி எதிரி 9 நாட்களாக சிறையில் இருந்து வரும் நிலையில், எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக மாட்டார் என்றும், தகுந்த ஜாமீன்தாரர்களை

ஆஜர்படுத்த தயாராக உள்ளதாக உறுதி கூறியுள்ள நிலையில், இவ்வழக்கில் காயம்பட்ட நபர்கள் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து திரும்பி விட்டதாக அரசுதரப்பில் தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரிக்கு நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்குவது நீதியின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**அதன்படி நிபந்தனை பின்வறுமாறு:**

1. எதிரி தனக்காக இரண்டு பிணையாளர்களை **ரூ.10,000/–**க்கு பிணைமுறி பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. எதிரியின் நிலையான வசிப்பிடம் முகவரி மற்றும் நிலையான வசிப்பிடத்திற்கான சான்றுகளை தாக்கல் செய்யவேண்டும்.
3. மேலும் எதிரி தினமும் மாலை 5.00 மணிக்கு அ.முக்குளம் காவல் நிலையத்தில் ஆஜராகி தொடர்ந்து 30 நாட்கள் கையெழுத்திட வேண்டும்.
4. எதிரி இவ்வழக்கின் சாட்சியத்தை சீர்குலைக்கக்கூடாது மற்றும் சாட்சிகளை துன்புறுத்தவோ, மிரட்டவோ கூடாது. குறிப்பாக புகார்தாரரை எந்தவிதத்திலும் இடையூறு செய்யக்கூடாது.
5. எதிரி மேற்கண்ட நிபந்தனையை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். தவறினால் எதிரிக்கு வழங்கப்பட்ட பிணை தானாகவே ரத்து செய்யப்படும்.

*இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு **2026ம் ஆண்டு ஜீலை மாதம் 16ம்** நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

***//உண்மை நகல்//***

VELSURYA SHREERAM

Digitally signed by VELSURYA SHREERAM

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.